# கடன் வகைகள்

## உங்கள் பணத்தை நிர்வகித்தல் மெய்த்தகவல் தாள்



பல்வேறு வகையான கடன்கள் உள்ளன.

## கடன் வகைகள்

- கார் கடன் என்பது ஒரு புதிய அல்லது உபயோகித்த காரை வாங்குவதற்காக – வேறு எந்தப் பொருளையும் வாங்குவதற்கு அல்ல
- வட்டியில்லா டீல் மூலம் பொருட்களுக்கு நீங்கள் பணம் கொடுப்பதற்கு முன்பே அவற்றை வீட்டுக்கு எடுத்துச் செல்ல முடியும்.
- நுகர்வோர் குத்தகை மூலம் நீங்கள் ஒரு பொருளை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு வாடகைக்கு எடுத்துக் கொள்ள முடியும். (எடுத்துக்காட்டாக, ஒரு வீட்டுக் கணினி அல்லது தொலைக்காட்சிப் பெட்டி)
- கடன் அட்டை என்பது அங்கீகரிக்கப்பட்ட கடன் எல்லைக்குள் பொருட்களை வாங்குவதற்குரியதாகும். நீங்கள் அதை கடன் தருவோரிடமிருந்து (கடன் வழங்குவோர்) பெற்றக் கொள்ளலாம்.
- வீட்டுக் கடன் என்பது வீடு வாங்குவதற்குரியதாகும – வேறு எந்தப் பொருளையும் வாங்குவதற்கு அல்ல.
- சம்பளநாள் கடன் என்பது குறைந்தகாலக் கடனாகும், அது சாதாரணமாக சில வாரங்கள் மட்டுமே இருக்கும்.
- தனிநபர் கடன் என்பது கார் வாங்குவது அல்லது விடுமுறையைக் கழிப்பது போன்ற உங்கள் தேவை அல்லது விருப்பத்துக்கு உரியவைகளுக்காக
- வாடகைக்கு வாங்குவது என்பது ஒரு பொருளை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு வாடகைக்காக வாங்குவதாகும்
- கடை அட்டைகள் என்பவை சாதாரண கடன் அட்டைகளைப் போல பயன்படுவது ஆனால் நீங்கள் பொதுவாக அதிக வட்டி செலுத்துவீர்கள்
- ஒருங்கிணைப்புக் கடன் என்பது உங்கள் அனைத்துக் கடன்களையும் சேர்த்து ஒரு கடனாக மாற்றுவதாகும்

## நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்

- பல்வேறு வகையான கடன்கள் உள்ளன.
- சில கடன்கள் மற்றவைகளை விட அதிகச் செலவாகும்.
- வெவ்வேறு நோக்கத்திற்காக வெவ்வேறு வகையான கடன்கள் பயன்படுத்தப்படுகின்றன.
- உங்களுக்கு எது சிறந்ததோ அந்தக் கடனைத் தேர்ந்தெடுங்கள்

## எங்கே மேலதிகத் தகவல்களைப் பெறுவது

கடன் வகைகளைப் பற்றிய மேலதிக விவரங்களுக்கு, MoneySmart -இன் **www.moneysmart.gov.au** என்ற முகவரிக்குச் செல்லுங்கள் அல்லது 1300 300 630 என்ற எண்ணுக்கு அழையுங்கள். அத்துடன் நிதித் தகவல் சேவை அலுவலரை 13 23 00 என்ற எண்ணில் அழைத்துக் கேட்டால் உங்கள் கடன் பயன்பாட்டை நன்கு நிர்வகிக்க உதவுவார்.

MONEYSMART

## இந்திரா வட்டியில்லாக் கடன் திட்டத்தில் கடன் பெறுகிறார்

இந்திராவின் துணி துவைக்கும் இயந்திரம் ஒழுகுகிறது. அவர் பழுது பார்ப்பவரைக் கூப்பிடுகிறார். அவரோ அந்த இயந்திரம் மிகவும் பழையதாக இருப்பதால் பழுது பார்க்க முடியாது என்று சொல்லி இந்திராவுக்கு ஒரு புதிய இயந்திரம் தேவை என்கிறார்.

இந்திரா புதிய துணி துவைக்கும் இயந்திரம் வாங்கத் தேவையான சேமிப்பு இல்லையெனக் கவலைப்படுகிறார். இந்திரா தான் கடையில் பார்த்த ஒரு துணி துவைக்கும் இயந்திரத்தை வாங்க 500 டாலர்கள் கடன் பெறுவதற்காக வங்கிக்குச் செல்கிறார்

இந்தப் பணத்துக்கான கடனைத் தாங்கள் தர இயலாது என்று வங்கி இந்திராவிடம் தெரிவிக்கிறது.

இந்திரா பக்கத்து வீட்டுக்காரரை அழைத்து தன்னுடைய சூழ்நிலையை ஏஞ்சலா என்ற பணியாளரிடம் கூறுகிறார்.

ஏஞ்சலா இந்திராவிடம், சமூகப் பணியாளர் எரிக் என்பவரைக் கூப்பிட்டு NILS எனப்படும் வட்டியில்லாக் கடன் திட்டத்தைப் பற்றிக் கேட்கச் சொல்லுகிறார். எரிக்குக்கு NILS –ஐப் பற்றிய அனைத்தும் தெரியும். ஏஞ்சலா இந்திராவிடம் அவருடைய தொலைபேசி எண்ணைக் கொடுக்கிறார்.

இந்திரா எரிக்கை அழைத்து எப்போது அவரைப் பார்த்து NILS – ஐப் பற்றி மேலும் அதிகம் தெரிந்து கொள்ள முடியும் என்று கேட்கிறார். எரிக் இந்திராவிடம் தன்னை வந்து பார்க்கும்படியும், அவருடைய சென்டர்லிங்க் அட்டையைக் கொண்டுவரும்படியும் சொல்கிறார்.

இந்திரா எரிக்கைச் சந்திக்கும்போது NILS என்பது சென்டர்லிங்க் உதவித்தொகை பெறுபவர்களுக்கானது என்றும், அவர்களால் முடிந்த அளவு கடனைப் பாதுகாப்பாகவும், நியாயமாகவும் பெறுவதற்கு உதவுகிறது என்றும் விளக்குகிறார். NILS என்பது துணி துவைக்கும் இயந்திரம், கணினிகள் அல்லது தட்டுமுட்டுச் சாமான்கள் போன்ற அவசியமான வீட்டுப்பொருட்களை வாங்குவதற்குப் பயன்படும் என்று அவர் சொல்கிறார். கடன் பெறுவது என்றால் இந்திரா பணத்தைத் திருப்பித்தர வேண்டும். ஆனால் வட்டியைத் திருப்பித்தர வேண்டியதில்லை.

இருவாரங்களுக்கு ஒருமுறை 20 டாலர்கள் வீதம் 12 மாதங்களுக்கு பணத்தைத் திரும்பச் செலுத்தத்தான் இந்திராவால் முடியுமென எரிக் மற்றும் இந்திரா கணக்கிடுகிறார்கள். எரிக் 500 டாலர்களுக்கு கடன் வாங்க ஏற்பாடு செய்கிறார். அதனால் இந்திரா ஒரு துணி துவைக்கும் இயந்திரம் வாங்க முடிகிறது.

இந்திரா மகிழ்ச்சியடைகிறார். ஏனென்றால் அவரது புதிய துணி துவைக்கும் இயந்திரம் மிகவும் நன்றாக இருக்கிறது. அத்துடன் அவர் 500 டாலர்களை அடுத்த 12 மாதங்களில் திருப்பித் தந்துவிட முடியும்.

© ASIC 2012 அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை

This page has been intentionally left blank.

© ASIC 2012 அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை